ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1716/23 - 2011 ජූලි 27 වැනි බදාදා - 2011.07.27

*1716/23 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/83.*

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் கமத் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த யாப்பா அபேவர்தன,
கமத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2011, யூலை 22.

**ஒழுங்குவிதிகள்**

2000 ஆம் ஆண்டின் சனவரி 5 ஆந் திகதிய 1113/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்துதல் (விற்பனையும் விநியோகமும்) ஒழுங்குவிதிகள் அதன் 2 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

“2. (1) ஆளெவரும் கமத்தொழில் இரசாயன விற்பனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஒருவராக பதிவாளருடன் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது அவ்வாறு பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்தியிருந்தாலன்றி அவர் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது பொதுப் பீடைக் கொல்லியை விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முன்வைத்தலோ ஆகாது.

(2) பதிவாளர் குழுவுடனான கலந்தாலோசனையுடன், கமத்தொழில் இரசாயன விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பிரமாணங்களையும் பயிற்சிக்கான கட்டணத்தையும் தயாரித்தல் வேண்டும்.

(3) பதிவாளர் கமத்தொழில் இரசாயனப் பொருளின் பாவனை மற்றும் சார்புடைய விடயங்கள் பற்றி தேசிய தொழிற் பயிற்சித் தகைமை முறைமையில் நாலாம் மட்டத்திலான பயிற்சி நெறியை அல்லது அதற்குச் சமமானதைப் பூர்த்தி செய்துள்ளவரும் அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து அதற்கான எண்பிப்பாக சான்றிதழொன்றைச் சமர்ப்பித்துள்ளவருமான எவரேனும் ஆளை கமத்தொழில் இரசாயனப் பொருள் விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளராகப் பதிவு செய்தல் வேண்டும்.

(4) பந்தி (3) இன் நியதிகளின்படியான பதிவு ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் புதுப்பிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

(5) பதிவைப் புதுப்பித்தலுக்காக அனுப்பப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் :-

(அ) ஒழுங்குவிதியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறு தொழில்நுட்பத் தகுதியின் செல்லுபடியாகும் தன்மைக்கான எண்பிப்புடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் ;

(ஆ) இலங்கை மருத்துவப் பேரவையுடன் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவத் தொழிலர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனை தொடர்பில் விரிவாக சுகாதார அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) இயைபான கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(6) சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"குழு" என்பது 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்துதல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பீடைக் கொல்லிகள் மதியுரைக்குழு எனப் பொருள்படும் ;

"பதிவாளர்" என்பது 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக் கொல்லிகளைக் கட்டுப்படுத்துதல் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பீடை கொல்லிகள் பதிவாளர் எனப் பொருள்படும்."

8- 325

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.